# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

O.S.No. 41/2022

PW1 பாப்பாத்தி நாள் 03.01.2024

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது மகன் சரவணன் வருமான வரி கட்டுவாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 24.11.2015 ல் ஈட்டுக்கடன் போட்டேன். அதிலுள்ள பட்டா எண், சர்வே எண் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான்கெல்லை காட்டி தான் எழுதிகொடுத்தார்கள். ஈட்டுக்கடன் போடுவதற்கு முன்பாகவே பணம் கொடுத்தேன். அந்த பணத்தை வசந்தாவிடம் கொடுத்தேன். அதை 100 ரூபாய் தாளாக தான் கொடுத்தேன். ஈட்டுக்கடன் பத்திரம் வாங்கும்போது இருந்தேன். ஈட்டுக்கடன் பத்திரத்தை ரூ.5000 பத்திரம் 1 , ரூ.500 பத்திரம் 1, ரூ.100 பத்திரம் 5 ஆக எழுதினோம். ஈட்டுக்கடன் பத்திரம் 3 வருட கெடுவிற்காக எழுதப்பட்டது. அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த ஈட்டுக்கடன் பத்திரத்தின் சொத்து மதிப்பு எனக்கு தெரியும்,. தற்போது எனக்கு ஞாயபகம் இல்லை. ஈட்டுகடன் சொத்து தார் ரோட்டின் மேல் உள்ளது என்றால் இல்லை. அந்த சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் சாட்சியாக கையெழுத்து போட்டவர் பொன்னுசாமி மகன் செந்தில்குமார், கலியமூர்த்தி மகன் கலையரசன் ஆவார்கள். இவர்கள் இருவரையும் விசாரித்தால் எவ்வளவு வட்டி கொடுத்தார்கள் , எவ்வளவு அசல் கொடுத்தேன் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். நான் வட்டி எதுவும் வாங்கவில்லை. பிரதிவாதி படிப்பு அறிவு இல்லாத காரணத்தினால் ரூ.5,00,000/- கொடுத்து விட்டு ரூ.6,00,000/- என்று எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி சாட்சிகளை விசாரித்தால் விவரம் தெரியும் என்றால் சரிதான். ஈட்டுக்கடன் கெடுகாலம் 3 வருடம் . அதற்குள் அவர்கள் வட்டி கொடுக்கவில்லை என்று நான் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. 2015 ல் ஈட்டுக்கடன் பதிவு செய்து 7 வருடம் கழித்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 6 வருடம் முடித்து 7 வது வருடம் தாக்கல் செய்கிறேன். ரூ.5,00,000/- கொடுத்து விட்டு ரூ.6,00,000/- என்று எழுதிக்கொண்டேன் என்றும், அதற்கு மாத வட்டி ரூ.10,000/- என்று பேசப்பட்டது என்றால் சரியல்ல. ரூ.100/-க்கு ரூ.2/- வட்டி என்று தான் பேசப்பட்டது. பிரதிவாதி 2015 முதல் 2017 வரை ரூ.1,80,000/- வட்டி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 2017 முதல் 2020 வரை சுமார் 36 மாதங்களின் வட்டி தொகை ரூ.3,60,000/- பிரதிவாதி அவருடைய இடத்தை

விற்று கொடுத்தார் என்றால் சரியல்ல. என் வீட்டில் சிசிடிவி கேமரா உள்ளது. அதை வைத்து சுமார் 6 1/2 வருடங்கள் இருக்கும். எனது வீட்டில் உள்ள சிசிடிவி கேமராவில் பிரதிவாதி கொடுத்த வட்டி தொகை பதிவாகியிருக்கும் என்றால் சரியல்ல. கடைசியாக கொடுத்த ரூ.3,60,000/- கொடுத்துவிட்டு எழுதிக்கேட்டார்கள் என்றும், அதனால் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த வட்டி பணத்திற்கு அத்தாட்சி மனசாட்சி என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியிடம் வட்டி பணம் வாங்கியுள்ளேன் என்றும் அது எனக்கும் என் மகனுக்கும் தெரியும் என்றால் சரியல்ல. என் மகன் வெளிநாட்டில் இருந்ததால் அவர் வந்தவுடன் பேசிக்கொள்ளலாம் பிரதிவாதி இருந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் வெளிநாட்டில் இருந்து வந்தவுடன் 10.04.2022 அன்று பாக்கி வட்டி தொகை ரூ.2,30,000/- மற்றும் அசல் தொகை ரூ.5,00,000/- வைத்து ஆக மொத்தம் ரூ.7,30,000/-த்தை வைத்து கொண்டு ஈட்டுக்கடனை ரத்து செய்ய சொன்னார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. எனது மகன் பிரதிவாதியிடம் தவறுதல் வட்டி ரூ.19,50,000/- கொடுத்தால் தான் ஈட்டுக்கடன் பத்திரத்தை ரத்து செய்து அசல் கிரைய பத்திரத்தை கொடுப்பேன் என்று சொன்னார் என்றால் சரியல்ல. என் மகன் அசல் வட்டி ரூ.19,50,000/- கொடுக்கவேண்டும் என்று சொன்னார். அதன்பிறகு தான் 13.04.2022 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதற்கான பதில் அறிவிப்பு கொடுத்தது எனக்கு தெரியும். அதற்கும் நாங்கள் மறு பதில் அனுப்பினோம். பிரதிவாதி அசல் வட்டி கொடுக்கவில்லை என்று நான் போலீசாரிடம் புகார் ஏதும் கொடுக்கவில்லை. என் மகன் மீது பிரதிவாதி 18.04.2022 ம் தேதி கந்துவட்டி வாங்குவதாக புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. புகார் கொடுத்தது தெரியும் என்றும், போலீசார் வீட்டிற்கு வந்து விசாரிக்கும்போது என் மகன் வெளிநாட்டில் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஈட்டுக்கடன் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டவர்கள் உறவினர்கள் அல்ல. பிரதிவாதி தான் அழைத்து வந்தார்கள். அவர்கள் பிரதிவாதிகளுக்கும் சொந்தகாரர்கள் அல்ல. ஈட்டுக்கடன் பத்திரத்தை என் பெயரில் போடவில்லை. என் மகன் பெயரில் தான் போட்டேன். நான் அதில் சாட்சி கையெழுத்து போடவில்லை. ஈட்டுக்கடன் பத்திரத்தை ரத்து செய்ய கோரி OP.No. 26/2022 தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும், அது ஒருதலைபட்சமாக உத்தரவு ஆகி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுநாள் வரை ஈட்டுக்கடன் பத்திரத்திற்காக ரூ.5,40,000/- த்தை வட்டியாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் இடம் தார் ரோட்டின் அருகில்

உள்ளது என்றும், அதனை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஈட்டுக்கடன் பத்திரம் பதிவு செய்தும் பிரதிவாதியின் அசல் கிரைய பத்திரத்தை நான் வாங்கி வைத்துள்ளேன் என்று சொன்னால் அது ஊர் வழக்கம். பிரதிவாதி அசல் வட்டியுடன் சேர்த்து ரூ.7,30,000/- த்தை நீதிமன்றத்தில் செலுத்த தயாராக உள்ளார் என்றால் அவர் மொத்தத்திற்கும் அசல் வட்டி செலுத்த வேண்டும். அசல் தொகை ரூ.5,00,000/- கொடுத்து விட்டு 3 மடங்கு வட்டி கேட்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ரூ.6,00,000/- கொடுத்தேன். என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.